எனது எண்: 5/3/3/01/2022
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.
2024.07.

**இந்து அறநெறி பாடசாலை முதல்வர்களுக்கு,**

**இந்து தர்மாசிரியர் சான்றிதழ்ப் பரீட்சை – 2024**

**விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

மேற்படி பரீட்சை தொடர்பாக 2024 ஜூலை மாதம் 26 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவுள்ள அறிவித்தல் மீதான தங்களது கவனத்தை ஈர்ப்பதுடன், விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

02. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பாக அதன் இரண்டாம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள அது தொடர்பான அறிவுறுத்தல்களை மிகக் கவனத்துடன் வாசித்து பூரணப்படுத்துவதுடன், விண்ணப்பப்படிவத்தில் அறநெறி பாடசாலை முதல்வர்களது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்படல் வேண்டும்.

03. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு 3.0 இன் கீழ் உள்ள கூட்டில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். தலைப்பு 2.0 இன் கீழ் தங்கள் அறநெறி பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள ஆறு இலக்கங்களை உடையதான <u>கணினி இலக்கம</u> குறிப்பிடப்படல் வேண்டும். (இவ்விண்ணப்பம் அனுப்பப்படும் கவரில் “SCH No” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்விலக்கமாகும்.) அறநெறிப்பாடசாலை தொடர்பான விசாரணைகளுக்கு இக் கணினி இலக்கத்தைக் குறித்து வைத்துக் கொள்ளவும்.

04. வெளியக பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்பட மாட்டாது. தங்களது வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள மறைப்பாடசாலை மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆதலால், உங்களது பிரதேசத்தில் எவரேனும் வெளயக பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் தரும்படி கேட்பின் அவரின் தகைமைகள் 2024 ஜூலை மாதம் 26 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்புடையதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, பரீட்சைக் கட்டணத்தை அறவிட்டு, தங்களது அறநெறி பாடசாலையினூடாக விண்ணப்பப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென்பதை விஷேடமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

05. முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தோற்றும் பரட்சார்த்திகள், மற்றும் அனைத்து வெளியகப் பரீட்சாத்திகளும் பரீட்சை கட்டணமாக ரூபா 200.00 இனை செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழுத் தொகைக்குரிய கட்டணத்தை <u>நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை பெற்று தங்களது பொறுப்பில் வைத்துக் கொள்ளவும்.</u> **<u>முத்திரை அல்லது காசுக்கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தலாகாது.</u>**

06. தங்களது அறநெறி பாடசாலையில் பரீட்சைக்கு தோற்ற உண்மையிலேயே ஆர்வமாகவுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் விண்ணப்பங்களை பூரணப்படுத்தும்போது தங்களது முழுப்பெயர் மற்றும் ஏனைய விடயங்கள் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி உறுதிசெய்து கொண்டபின் விண்ணப்பப்படிவத்தில் தங்கள் கையொப்பத்தை இடுமாறும் விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

07. விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு <u>மூலப் பிரதி, பரீட்சைகள் ஆணையாளர நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல, 1503, கொழும்பு</u> எனும் விலாசத்துக்கு இத்துடன் அனுப்பப்பட்டுள்ள உறையினுள் இட்டு 2024 ஆகஸ்ட் மாதம் 27 <u>ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.</u> இரண்டாம் பிரதியை <u>தம் வசம் வைத்துக் கொள்ளவும். காலதாமதமான, அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதால் சரியான முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பி குறித்த திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு</u> கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

08. முதல் முறையாக விண்ணப்பிக்கும் அறநெறி பாடசாலைகள் இந்து சமய விவகாரங்கள் திணைக்களத்தில் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை விண்ணப்பபடிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஜே.ஏ.ஜே.ஆர். ஜயக்கொடி,
பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் (ஒழுங்கமைப்பு)
பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்காக.